**E.A.10/2025 in E.P.36/2021 in O.S.44/2012**

**ம.சா.1 : பெருமாள்**

**தேதி : 24.11.2025**

**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் மனுச்சொத்தை வாங்குவதற்கு முன்பாக வில்லங்க சான்றிதழை பார்க்கவில்லை. நீங்கள் வில்லங்கம் பார்க்காமல் சொத்தை வாங்கமாட்டார்கள் என்றும் நீங்கள் வில்லங்கம் பார்க்காமல் சொத்தை வாங்கியதாக பொய்யாக குறிப்பிடுகீறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மனு 1வது அயிட்ட சொத்திற்கும் நிறைவேற்று மனுவில் கண்டுள்ள சொத்திற்கும் வேறு வேறு நான்கெல்லைகள் என்ற சொன்னால் சரிதான். உங்களுக்கு கிரையம் கொடுத்தவர் வேறு நபர் என்றும் 1ம் எதிர்மனுதாரருக்கு கிரையம் கொடுத்தவர் வேறு நபர் என்று சொன்னால் சரிதான். என் சொத்து அமைந்துள்ள இடம் வேறு 1ம் எதிர்மனுதாரர் கிரையம் வாங்கிய சொத்து வேறு இடத்தில் உள்ளது. ம.சா.ஆ.1–ல் உட்பிரிவுடன் சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றும் ம.சா.ஆ.7 –ல் உட்பிரிவுகள் காட்டாமல் மொத்த சர்வே எண்ணிற்கும் வில்லங்க சான்றிதழ பெற்று தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். சர்வே எண்.684 என்ற சர்வே எண் முழுமையாக உட்பிரிவு காட்டாமல் வில்லங்க சான்றிதழ் வாங்கியதால் தான் எதிர்மனுதாரரின் சொத்தும் வில்லங்க சான்றிதழில் வருகிறது என்று சொன்னால் சரியல்ல. 4ம் எதிர்மனுதாரர் மீனாட்சியை எனக்கு தெரியாது. 4ம் எதிர்மனுதார் மீனாட்சி உங்களுக்கு மிக நெருக்கமான நண்பர் என்பதால் நிறைவேற்று மனுவை காலதாமதப்படுத்துவதற்காக நீங்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்த மனு உள்நோக்கம் கொண்டது என்றும் உங்கள் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2025.11.24 17:04:35 +0530

மாவட்ட நீதிபதி,

கரூர்.